உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 7 | துன்மதிவரு புரட்டாசி-ஐப்பசிமீ<br>1921வரு செப்டம்பர்-அக்டோபர்மீ | இதழ் 6-7 |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்.


அத்துவிதவாதம் ... ... ... 121

கடவுள் இன்ப துன்பமில்லாதவர் ... ... ... 127

கள்ளர்கள் ... ... ... ... 130

சமரச ஞானதீபம் ... ... ... ... 138

சைவ மகா ஜனக்கூட்டமும், சுத்தாத்வைத சித்தாந்த சைவமடஸ்தாபனமும் ... ... ... 142


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திராசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1921

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# அறிவிப்பு.

இப்போது வி. பி. தபாலில் அனுப்பப்படுவன யாவும் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். சந்தாதாரர்கள் சந்தா ரூபா 1½ யோடு இரண்டணு சேர்த்து ரூபா 1-10-0 கொடுக்க வேண்டியிருக்கிறது. சந்தாதாரர்களே மணியார்டர் மூலமாய் ரூபா 1-6-0 அனுப்பினுல் இரண்டணு அநுகூலமாயிருக்கும். எமக்கும் பிரயாசை குறையும். இதை அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் சிந்தித்திடுக.

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டியிருப்பதனுலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயா யிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபி விருத்திக்கு இன்றியமையாத கருவியா யிருப்பதனுலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது எம்மால் வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றேம். வருமானக் குறைவால் இப்போது 6-ம் இதழையே 7-ம் இதழாகவும் அனுப்ப நேர்ந்தது. பத்திராதிபர்.

---

# அறிவிப்பு.

## தேவகோட்டை சைவ சித்தாந்த வித்தியாசாலை.

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களால் நிறுவப்பெற்று நடந்து வரும் இவ்வித்தியா சாலையில் இப்பொழுது சிலர் கல்வி பயின்று வருகின்றனர். இன்னும் சிலர் வரின் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். இப்பொழுது சிவஞான சித்தியார், திருவருட் பயன், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி என்னுமிவைகள் பாடங்களாக நடந்து வருகின்றன. சிவப்பிரகாசமும், இலக்கணச் சுருக்கமும் முற்றுப்பெற்றன. கல்வி பயில விரும்புவோர்க்கு வேண்டும் உணவு உடை முதலியன ஸ்ரீமான் செட்டியாரவர்கள் உபகரித்து வருகின்ருர்கள். வர விரும்புவோர் தம்முடைய ஊர், பேர், முதலியவற்றையும், தாம் படித்திருக்கும் நூல்களையும் கண்டு ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்கு மேலே கண்ட விலாசப்படி தெரிவித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

இங்ஙனம்:
பொ. முத்தைய பிள்ளை,
சிவாகம சங்கம், தேவகோட்டை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

# சைவம்.


| மலர் 7 | துன்மதி௵ புரட்டாசி-ஐப்பசிமீ<br>1921௵ செப்டம்பர்-அக்டோபர்மீ | இதழ் 6-7 |
|---|---|---|


## திருவிசைப்பா.

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக் கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்குளிர வென்கண்குளிர்ந்தனவே.

---

## அத்துவிதவாதம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

கேவலாத்துவிதிகள், விசிட்டாத்துவிதிகள், துவைதிகள், சுத்தாத்து விதிகள் என்னும் நான்குபிரிவினர் தனித்தனி தாந் தாமே அத்துவிதிகள் என வாதித்துநிற்றலை யாவரும் அறிவர். அதன் வரலாறும் விளக்கமும் யாதென்பதை யறிய அநேகர்க்கு விருப்பமிருக்குமாகலின், அதனை இங்கே விளக்கிக்காட்டுகிறோம்.

உண்மைவேதாந்தமாகிய உபநிடதங்களிலே, சர்வசாஸ்திர சாரமாய் ஞானோபதேசகாலத்தில் ஆசிரியனால் உபதேசிக்கப்படும் ஒருவார்த்தையாகிய "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்கள் "அது நீ ஆகின்றாய்" எனவும், "அது நான் ஆகின்றேன்" எனவும், "அது இது ஆகின்றது" எனவும் மூவிதம் பற்றி நிகழுவவாயின. அம்மகாவாக்கியங்களுள்ளே "அது நீ ஆகின்றாய்" என்பதில் "அது" என்பது ஒருபொருள், "நீ" என்பது ஒரு பொருளாகலின், ஒருபொருள் மற்றொரு பொருளாவது எப்படி என ஐயநிகழ்ந்தது. அவ்வையநீக்குதல் காரணமாக, அது இது

ஆதற்கேதுவாய் அவ்விரண்டற்கும் உள்ள சம்பந்தம் "அத்துவிதம்" என உணர்த்தப்பட்டது.

இவ்வத்துவிதச் சொல்லை நான்குவிதவாதிகளுந் தத்தம் மதங்களுக்கு இயைத்துப் பொருள்கொள்வாராயினர்.

அவருள், கேவலாத்துவிதிகள் ஆன்மா ஒன்றே உள்ளது; அதைவிட வேறொரு பொருளில்லை என்பவர். அதனால் அவர் ஏகான்மவாதிகள் எனப்படுவர். இம்மதப் பிரவர்த்தகர் சங்கராசாரியர்.

இராமாநுஜமதத்தர் வாசுதேவனே பரம்பொருள்; சடமும் சித்துமாய எல்லாம் அவனது பரிணாமமாம் என்பர்.

சிவாத்துவிதசைவர் சிவமே பரம்பொருள்; சித்தும் சடமுமாய எல்லாம் அதன் பரிணாமமேயென்பர். இவ்விருவரும் விசிட்டாத்துவிதிகளெனப்படுவர்.

துவைதிகளாவார் பேதவாதிகள். அவர் மத்துவாசாரியமதத்தர். ஆன்மாவும் முதல்வனும் வேறுவேறிருக்குமென்பது அவர் மதம்.

சுத்தாத்துவிதிகளாவார் சைவசித்தாந்திகள். அவர் முதல்வனும் ஆன்மாவும் மலமும் எனப்பதார்த்த மூன்றுள்ளன. அவற்றுள் முதல்வன் சூக்குமசித்தாயும் ஆன்மா தூலசித்தாயுமிருக்கும். அவ்விரண்டும் நிற்குநிலை ஒன்றுமன்று, வேறுமன்று, இரண்டறநிற்கும் என ஓதுவர்.

இப்படி இந்நால்வர் மதமும் வேறுபடுதலால், அது இது ஆதற்கணுள்ள அத்துவித சம்பந்தத்தையும் தத்தமதங்களுக்கு இயையப் பொருள்கொள்ள வேண்டியவராயினர்.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் முதலில் உள்ள அகரம், இன்மை அன்மை மறுதலை என்னும் மூன்றனுள் ஒருபொருள் பயக்கும். அப்படியிருத்தல் அவர் மனம்போனபடி பொருள் கொள்ளுதற்கு வாய்ப்பாயிற்று. வேதாந்த நூல்களிலே துணிந்த பொருள் கூறப்படாமையும் அவரது இடர்ப்பாட்டுக்கு மூலமாயிற்று.

ஏகான்மவாதிகளும் இராமாநுஜமதத்தரும் சிவாத்துவிதிகளும் அகரத்திற்கு இன்மைப்பொருள் கொண்டனர். மத்துவமதத்தராகிய துவைதிகள் மறுதலைப்பொருள் கொண்டனர். சைவசித்தாந்திகள் அன்மைப்பொருள் கொண்டனர்,

ஏகான்மவாதிகளும், இராமாநுஜமதத்தரும் சிவாத்துவித சைவரும் இன்மைப்பொருள் கூறினும் இன்மைக்குப் பொருள் கொள்ளும் வகையில் வேறுபடுவர்.

அவருள் ஏகான்மவாதிகள் கொள்ளும் பொருளாவது, அ-துவிதம் இரண்டின்மை எனப்படுதலின், இரண்டின்மை ஒரு பொருண்மாத்திரையே யுணர்த்தும். இரண்டு மூன்று நான்கு முதலியவாய் எண்ணப்படும் பொருள்களில் இரண்டின்மையின்மையின், அவை அச்சொற்குப் பொருளாகா. அதனால், அத்துவிதம் என்னும் சொல்லின் பொருள் ஒன்றென்பதேயாம் என்பது. அது நீ, அது இது என்பன ஒன்று என்பதே அவரது உபதேசமாம்.

இனி, ஆன்மா ஒரு பொருளாயினும் குணகுணி என வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலம் ஒன்றாதலின்மையின் அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியுமாதலின், தன்னின் வேறொரு பொருளுமின்றித் தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பொருள் என்பது அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளாம் என்பர். அதனால் அவர் கேவலாத்துவிதிகள் எனப்படுவர்.

இராமாநுஜர் சிவாத்துவித சைவர் முதலாயினோரும் அவ்வாறே இன்மைப் பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொண்டு, சத்தி சங்கற்ப முதலிய குணங்கள் பரப்பிரமப் பொருட்கு உள என்று உபநிடதங்களிற் கூறுதலாலும், அவை செயற்கைக் குணமென்றல் பொருந்தாமையாலும், பசு பாசங்களும் உள்ளனவென்பது உபநிடதங்களில் ஓதப்படுதலாலும் அவற்றிற்கு மாறாகக் கேவலாத்துவிதமெனக் கொள்ளுதல் பொருந்தாது; தன்னோடு இயைபுடைய பசுபாசங்களானும், தன் குணங்களாகிய சத்தி சங்கற்பம் முதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை ஒன்றேயாம் என்பதே அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளாமென்பர். அதனால் அவர் விசிட்டாத்துவிதிகளெனப்படுவர்.

பேதவாதிகளாகிய மத்துவமதத்தர் மறுதலைப்பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன்று எனப் பொருள்கொண்டு, அவ்வாறு கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவதும் உண்டென்பதற்குத் தடையின்மையின், அத்துவிதம் என்பதும் துவிதம் என்னும் பொருளைத் தரும் என்பர்.

இவரெல்லாரும் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாம் எனக்கொண்டு தத்தம் மதங்களோடு முரணுமைப்பொருட்டுக் கேவலம் என்றும் விசிட்டம் என்றும் மறுதலை என்றும் அடைகூட்டி இடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள், ஏகான்மவாதிகள் கூறும் கேவலமும், பேதவாதிகள் கூறும் மறுதலையும் சுருதிகளோடு மாறுபடுவனவாம். அதனால் இவ்வத்துவித விசாரத்தில் அவை பொருந்துவனவல்ல. இராமாநுஜரும் சிவாத்துவித சைவருங் கூறும் விசிட்டம் என்பது சுருதிகளோடு ஒவ்வுமாயினும் அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் ஒன்றெனக் கொள்ளுதல் ஒவ்வாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின், ஒன்றெனவே தெளிவாகக் கூறியிருக்கலாம். அவ்வாறன்றி, அத்துவிதம் என உய்த்துணர வைத்தோத வேண்டாமையானும், ஒன்றெனப் பொருள்கொள்ளின், மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதம் என்றது பற்றி அவ்விடத்து ஒரு பயனும் பிறவாமையானும் என்க.

இனி, அத்துவிதம் என்பது "அது" "இது" என்னும் இரண்டு பொருள்கள் ஒன்றுதற்கண் உள்ள சம்பந்த விசேடமுணர்த்த எழுந்ததாகலின், அச்சொல்லாற் பெறப்படும் சம்பந்தம் ஐக்கியமோ? தாதான்மியமோ? சமவாயமோ? சையோகமோ? சொரூபமோ? வேறோ? என விசாரிக்குமிடத்து, ஆற்றுநீரும் கடல்நீரும் ஒன்றாய்ச்சேர்ந்தாற்போலவும் குடாகாயமும் மகாகாயமும் ஒன்றாய்ச் சேர்ந்தாற்போலவும் ஐக்கியமெனின், அவ்வாறு சேர்ந்தவிடத்து ஒருபொருளேயாகலின் "ஒன்று" என்றே கூறலாம். அத்துவிதம் என உய்த்துணரவைக்க வேண்டுவதில்லை அன்றியும் ஒன்றாயவிடத்து அதுவதுவாய் நின்றறிதலாகிய ஆன்மாவின் இலக்கணம் முத்திக்காலத்து இல்லையென்றாகி வழுவாம். ஆதலின், ஐக்கியமென்றல் பொருந்தாது.

குண குணிகட்குத் தம்மின் உளதாகிய சம்பந்தம் போலும் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனைப் போலக் குணகுணிப் பொருளாய் நிற்பதன்றி, முதல்வனுக்குக் குணமாகாமையின் அவ்வாறியைதல் பொருந்தாது.

சமவாயமெனின், தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறும் சமவாயம் என்பது ஒன்றின்மையின் அதுவும் பொருந்தாது.

விரலும் விரலும்சேர்ந்தாற் போலச் சையோகமெனின், வியாபகத்துவமில்லாத அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருள்கட்குக் கூடாமையின், அதுவும் பொருந்துவ தன்று.

இனி, யாதானுமோரியையு பற்றிக் கூறப்படும் சொரூப மெனின், அது மகாவாக்கியப் பொருளை வலியுறுத்தற்கு எழுந்த அத்துவித மென்னும் சொல்லுக்குப் பொருளாகாது. இங்ஙனம் அவையெல்லாம் பொருந்தாது ஒழிவனவாம்.

இனி, சுத்தாத்துவிதிகள் கூறும் பொருள் இதுவென்று காட்டுதும்.—ஒருபொருளே அவயவ அவயவிகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும் எனத் தாதான்மியம் இருவகைப்படும். அவற்றுள், முன்னையது தாதான்மியம் என்றும் பின்னையது அத்துவிதம் என்றும் வழங்கப்படும். மேலே கண்டிக்கப்பட்ட தாதான்மியம் ஒருபொருளே குணகுணிகளாய் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்குமெனக் கொள்ளுந் தாதான்மியம்.

இங்கே கொள்ளப்பட்ட தாதான்மியம் "இருபொருளே அதுவதுவாய்" ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய "அத்துவிதம்" என்னுந் தாதான்மியம். இதுவே வேதாந்தமாகிய உபநிடதங்களின் தாற்பரியமாம் அது பிரமோபநிடதமும் சுவேதாசுவதரோபநிடதம் ௧௦-ம் அத்தியாயம் ௧௫-ம் மந்திரமும் "திலேஷுதைலம் ததிநீவசர்ப்பிஃ ஆபஸ்ரோதஸ்வரணீ ஷுசாக்நிஃ எவமாத மாத்மநிஜாயதே"

(திலத்தின் கண்ணே தயிலம் போலவும், தயிரில் நெய் போலவும், பிரவாகத்தில் நீர்போலவும், அரணியில்அக்கினி போலவும் இவ்வான்மா ஆன்மாவிடத்தில் உண்டாகின்றான்) என ஓதுமாற்றால் உணரப்படும்.

இதனையே "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போன், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" எனத் தமிழ்வேதம் ஓதிற்று.

இதனையே "முப்பொருளும் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும்போல ஒன்றற்கொன்று தூல சூக்குமங்களாமியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்" என்னுஞ் சுருதி விளக்கிற்று.

இருபொருள் அத்துவிதமாய் நிற்குநிலை வியாபக வியாப்பிய முறையாம். முதல்வன் வியாபகப்பொருள். ஆன்மா வியாப்பியப் பொருள். இந்நிலை பேதம் பேதாபேதம் அபேதம் என்னும் முறைகளுள் அமையாமையின் அத்துவிதம் எனப்படும்.

அதுபற்றியே முதல்வன் கலப்பினால் ஒன்ருயும் செலுத்துதலால் உடனுயும் பொருட்டன்மையால் வேருயும் நிற்பனென ஓதுவர். அத்துவிதமென்னும் சொல் இம்மூன்று தன்மையையும் அடக்கிநிற்கும்.

இனி, இம்மூன்றற்கும் தனித்தனி உவமைகூறுமிடத்து, "அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல்" "வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்" என்பன கலப்புப்பற்றி ஒன்ருதலாகிய அபேத நிலையை உணர்த்துவன. "பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்-எண்ணுஞ் சுவையும்போல்" என்பது செலுத்துதலால் உடனுதலாகிய பேதாபேதநிலையை யுணர்த்துவது. "இரும்பைக் காந்தம் வலித்தாற்போலியைந்து" என்பது வேருதலாகிய பேதநிலையை யுணர்த்துவது.

வேதங்கள் ஆகமங்கள் அவற்றின் வழிநூல் சார்புநூல்களெல்லாம் இம்முறை பற்றித் தனித்தனி உவமை கூறுமிடங்களில் அவ்வுவமை கூறிய நோக்கம் இதுவென உணர்ந்து பொருள் கொள்ள வேண்டும்.

இனி, இம்மூன்று இயைபும் தன்னிடத்துத் தோன்ற இம்மூன்றற்கும் வேருய் நிற்கும் அத்துவிதத்துக்குச் சிறந்தெடுத்துக்காட்டும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய்நிற்றலாம். "காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், "காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்-கேயுமுயிர்காட்டிக் கண்டிடுமாபோல வீசனுயிர்க்குக் காட்டிக்கண்டிடுவன்" எனவும் ஓதியதும் அதுநோக்கி.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் அகரத்திற்கு அன்மைப்பொருள்கொண்டு, அச்சொல் ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலமென்ருதல் விசிட்டமென்ருதல் மறுதலையென்ருதல் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்குவர். சுத்தமென்றது யாதானுமொன்ருன் விசேடிக்கப்படாது நிற்றலை. ஏனையோர் வலிந்துகொள்ளும் அப்பொருள்கட்குக் கேவலம் முத

லிய அடைகொடாதொழியின் அப்பொருள் பயவாமையும் உணரற்பாற்று.

இன்னும் இப்பொருளை வலியுறுத்தி அரதத்த சிவாசாரியரும் "வேதத்தில் ஆங்காங்குப் பிரமப் பொருளாகிய சிவனுக்கும் ஆன்மாவுக்கும் அத்துவித பாவனை கூறப்படுமாறு என்னை?" என ஆசங்கை நிகழ்த்தி "கருடனும் மாந்திரிகனும் தம்முள்வேறுதல் வெளிப்படையாயினும் கருடோகம் என்னும் அத்துவித பாவனை விஷநிவிர்த்திப்பொருட்டு வேண்டப்படும். அதுபோலப் பிரமப் பொருளாகிய பரமசிவமும் ஆன்மாவும் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும் மலநிவிர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவித பாவனை கூறப்பட்டது. அதுகொண்டு தானே நிருபசரித ஐக்கியங் கூறுதல் சாலாது" எனச் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்து ஓதியருளினர்.

ஆதலின் இவ்வத்துவிதவாதத்தில் இடர்ப்பாடின்றி நேரே பொருள்கொள்ளக் கிடக்கும் சுத்தாத்துவிதமே துணிந்த மெய்ப் பொருளாமென்பது உணரத்தக்கது.

---

## கடவுள் இன்ப துன்பமில்லாதவர்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

இன்பதுன்பம் என்று எடுத்துப் பேசப்படுவன அனைத்தும் மாயையிலே தோன்றுங் கருவி கரணங்கள் வாயிலாக அனுபவிக்கப் படும் அனுபவங்களாம். ஆன்மாக்கள் முத்தியில் அனுபவிக்கும் இன்பம் மாயா கருவிகள் அனைத்தும் கழன்று அனுபவிக்கும் இன்பமாதலின், அது ஆனந்தம் எனப்படும். இந்த ஆனந்தம் அளவிடற்கரியதாகலின் பேரின்பம் எனப்படும். உலக இன்பம் வரையறைப்பட்டதாதலின் சிற்றின்பம் எனப்படும். மாயாகருவிகள் கொண்டு அனுபவிக்கப்படும் சிற்றின்ப அனுபவம் கடவுளிடத்தே சிறிதாவது கேட்கப்படமாட்டாது. இந்த மாயா கருவிகள் வாயிலாக அனுபவிக்கப்படும் துன்பமும் கடவுளிடத்தே அணுத்துணையும் இல்லையாம். ஆனதுபற்றியே அவர் இன்பதுன்பம் இல்லார் எனப்படுவர்.

உலக இன்ப துன்பங்கள் ஒன்றனை ஒன்று அவாவிநிற்கும். அதாவது உலகத்திலே இன்பமின்றித் துன்பத்தையும் துன்பமின்றி இன்பத்தையும் ஆன்மாக்கள் அறிதலும் அனுபவித்தலும்

இல்லை என்றபடியாம். இதுபற்றியே உலக இன்பதுன்பங்கள் வரையறைக்கமைந்தன எனப்படும். முத்தியின்பம் யாதொரு வரைவுபாட்டுக்கு முரியதன்று. அந்த இன்பத்தை அனுபவித்தற் குப் பிறிது யாதொரு அனுபவம் வேண்டப்படுவதுமன்று. அது துன்பக் கலப்புச் சிறிதுமில்லாத பரிபூரணனந்தமாம். இந்தப் பரிபூரணனந்தத்துக்குக் காரணர் அந்தப் பரிபூரணனந்த சொரூபி யாகிய கடவுளே யாதலின் அவர்மாட்டு அந்தப் பரிபூரணனந்தத் துக்குத் தடையாகிய இன்பதுன்பங்கள் ஒருவாற்ருனுங் கேட்கப் படுவது கூடாது.

கடவுள் இன்ப துன்பம் உடையர் எனின், அவர் அந்த இன்ப துன்பங்கட்குக் காரணமாகிய மாயாமலத்தால் தாக்குண்பாராய், அங்ஙனம் தாக்குண்டல் காரணமாகப் பிறப்பிறப்புகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் அறிவறியாமைகளுக்கு முரியராய்க் கடவுளிலக்கணத்திற் பிறழ்ந்திடுவர். இன்பதுன்பங்க ளெல்லாம் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய ஆன்மாக்களிடத்தன்றி முற்றறி வும் முற்றுத்தொழிலுமுடைய முழுமுதற் கடவுளிடத்தே கேட்கப் படுதல் கூடாதாதலின், அவர் இன்பதுன்பம் இல்லாதவர் என்று சாத்திரங்கள் எல்லாம் பெருமுழக்கிட்டோலிடும். இதுபற்றியே இறவாத் தனிநிலை யெய்திய மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் "இன்பமுந்துன்பமும் இல்லானே உள்ளானே" என்று அவரைப் புகழ்ந்து பாடினர். அந்தப் பெருந்தகையார் கடவுளை "இன்ப முந் துன்பமும் இல்லானே" என்று முதற்கண் எடுத்துக்கொண்டு பின்னர் "உள்ளானே" என்றெடுத் தேத்திய தென்னை யெனின், அவருடைய நாடக நோக்கியென்க. அவர் ஆன்மாக்களை எல் லாம் ஈடேற்றுதற்பொருட்டாக, அவர்களை உயிர்க்குயிராய் நின்று இயக்கி அவர்கள் துன்பமுற வேண்டிய காலத்துத் தாமும் அவர்க ளோடு உடங்கியைந்து நின்று துன்பமுற்ருலன்றி அவர்கள் துன்ப முறுதல் கூடாதாதலின், அவர் நாடகமாத்திரையாகத் துன்பமுறு வர். அதாவது அத்துன்ப அனுபவத்தை ஆன்மாக்களுக்கு ஊட்டுதற்பொருட்டாக, அத்துன்ப அனுபவத்தைத் தாமும் அனு பவித்தருளினர் போற் காட்டுவர். ஒருசிறு குழந்தைக்கு அரிச் சுவடி கற்பிக்கப் புகுந்த ஆசிரியன் அவ்வரிச்சுவடியைத் தானும் சொல்லி அக்குழந்தையைக் கொண்டு சொல்வித்தல்போல. ஆசி ரியன் அங்ஙனம் சொல்வதனுல், அவன் அரிச்சுவடி படிக்கின்ருன் எனப்படமாட்டான். அவன் சொல்வதெல்லாம் நடிப்பு மாத்

திரையாதல்போல் கடவுள் அனுபவிக்கும் அனுபவமும் நடிப்பு மாத்திரையேயாம். கடவுள் நடித்தலினாலே ஆன்மாக்களுக்கு உண்மைப்பயன் சித்திப்பது, ஆசிரியன் அரிச்சுவடியைச் சொல்வதனால், சிறுகுழந்தை அதனைப் பயில்வதாகிய பயன் வாய்ந்திடுதல் போலாமென்க.

இஃதுண்மையேயாயினும் கடவுள் பேரருளாளராதலால், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தமிழ்ந்தி அலக்கணுற்றழிதலைநோக்கி அவருக்குத் துன்பமுளதாதல்வேண்டுமன்றோ எனின், அவர் பேரருளாளராதலால், ஆன்மாக்களை ஈடேற்றுதல் வேண்டுமென்னும் ஒழியாச்சிந்தை எக்காலத்தும் உடையராவர். அதுகொண்டு அவருக்குத் துன்பமுளதாதல் சிறிதுமில்லை. ஒருவன் அபாயத்திட்பட்ட காலத்து, அவனை அவ்வபாயத்தினின்றும் விலக்குதற்கியைந்த உபாயங்களைத் தளர்வின்றிச் செய்துகொண்டிருத்தலே அவனுடைய நல்விருத்தியிற் கருத்துடையான் செய்வது. அங்ஙனமின்றி அவ்வபாயத்தின் பொருட்டுத் துன்பப்பட்டுக் கொண்டிருப்பான் விவேகி எனப்படமாட்டான். அல்லாமலும் அவன் துன்பமுற்றழிவானாயின் அபாயத்துட்பட்டானை அவ்வபாயத்தினின்று நீக்குதலும் கூடாது. ஆன்மாக்களை எல்லாம் ஈடேற்றுவதே கடவுள் அல்லும் பகலும் செய்யுந்தொழிலாயினும் அவர், அவர்கள் பொருட்டுச் சிறிதாவது துன்ப முறுவாரல்லர். துன்பமுறுதல் காருண்ணியம் எனப்படமாட்டாது. காருண்ணியமுடையாரிடத்தே துன்பம் ஒரு சிறிதும் கேட்கப்படுவது கூடாது. கடவுள் அனந்த காருண்ணியராதலின் அவரிடத்தே அணுத்துணையாவது துன்ப முளதாதல் இல்லை என்க. அன்றியும் துன்பத்தை ஒழித்தற்குரிய ஆற்றல் இல்லானே அத்துன்பத்தை நோக்கித் துன்பமுறுவது. கடவுள் துன்பத்தை ஒழித்தற்குரிய ஆற்றல் உடையராய், ஆன்மாக்கள் எய்தும் துன்பத்தை எல்லாம் அவர்கள் பேரின்பத்தை அனுபவித்தற்குரிய சாதனமாக அவர்கள் பால் தாமே உய்ப்பாராகலின், அவர் அத்துன்ப நோக்கித் துன்புறுவாரல்லரென்க.

---

# கள்ளர்கள்.

(சென்னை பப்ளிஸிடி பீரோவினால் பிரசுரிக்கப்பட்டது.)

"கள்ளன்" என்றால் தமிழில் திருடன் என்று அர்த்தம். இதிலிருந்து கள்ளர்களெல்லோரும் திருடர்களென்று சொல்வது தவறு. அந்த ஜாதியில் பெரும்பான்மையோர் யோக்கியர்களாயும், அநேகர் நல்ல அந்தஸ்திலும், குறைந்த பக்ஷம் ஒருவர் அரசாளுபவராயும் இருக்கிறார்கள். ஆயினும், கள்ளர்களின் முன்னோர்கள் துணிகரமான செய்கைகளைச் செய்து காலம் கழித்து வந்தார்களென்றும் அவர்களின் ஸந்ததியாரிடமும் அந்த முரட்டுச் சுபாவம இன்னும் இருக்கிறதென்றும் இந்தச் சுபாவத்தினால் அண்டை அயலில் இருப்பவர்களுக்கு, விசேஷமாய் தஞ்சாவூர் திரிசிராப்பள்ளி தாலூகாக்களிலும், மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலுமுள்ள பிற மலைக்கள்ளர்களாலும் தொந்தரவு உண்டாகிறதென்றும் பொதுவாய்ச் சொல்லலாம். சில பிரதேசங்களில் இப்படிப்பட்ட முரட்டுச் சுபாவமுள்ள மனிதர்களைப் போலீஸார் அடக்குவதற்கான முறை கண்டுபிடிக்கமுடியாதபடி, அத்தனை அதிகமாய் இருக்கிறார்கள். அடியிற்கண்ட சங்கதி அப்படிப்பட்ட இடங்களிலுள்ள கள்ளர்களைப்பற்றியே என்பது கவனிக்கத்தக்கது.

கள்ளர்களில் பலர், குற்றஞ்செய்வது எவ்விதத்திலும் தவறான விஷயம் என்று எண்ணுகிறதில்லை. இதுதான் பெரிய கஷ்டம்.

குற்றம் செய்வதில் தேர்ந்தவனே வீரன். அவன் ஊரில் உள்ள பெண்களெல்லோரும் தங்களுக்கு புருஷனாயிருக்கத்தக்க யோக்கியதை அவனுக்குத்தான் இருப்பதாகக் கருதுகிறார்கள். சில கிராமங்களில், கள்ளச்சிறுவர்கள் தங்கள் பௌருஷத்தைக்காண்பிக்கும் பொருட்டு குற்றம் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி ஒருவன் செய்து விட்டால் அவனை மற்றச் சிறுவர்களெல்லோரும் வெகுவாகக் கொண்டாடுவார்கள். குற்றம் செய்வதில் ஒருவனை யொருவன் தோற்கடிக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதால், அதிகக் குற்றவாளிகள் உண்டாகிப் போலீஸாருக்கும் அவர்களுடன் சமாளிக்க முடியாமல் போகிறது. குற்றம் செய்து பிறகு தண்டனையடைந்தாலும் தப்பித்துக்கொண்டாலும் கள்ளர்களுக்கு ஒன்றுதான். மூன்று முறை அல்லது அதற்கு மேற்பட்டு தண்டனை யடைந்த கள்ளன் ஒரு வீரனாகக் கருதப்படுகிறான்.

அவன் ஜெயிலிலிருக்கும் காலத்தில் அவன் குடும்பத்துக்கு அநேக விதமான உதவி செய்யப்படுகிறது. குற்றவாளிகளுள் எவன் போலீஸ்காரருக்கும் ஊராருக்கும் அகப்படாமல் பன்முறை தப்பிப்போகிறானோ அவனைத்தான் இயற்கையாகவே அதிகக் குற்றவாளிகள் சூழ்ந்திருக்கிறார்கள். சமீபத்தில் பிடிக்கப்பட்ட வயதுமுதிர்ந்த ஒரு கள்ளன் தன் காலத்திற்குள் 900 கன்னக்களவும் திருட்டும் செய்திருப்பதாகவும் ஒரே ஒரு முறைதான் தண்டனையடைந்ததாகவும் பெருமையடித்துக்கொண்டான். இது நிஜமாயிராது; ஆயினும் போலீஸ்காரருக்கு சென்ற வருஷத்தில் ரிபோர்ட் செய்யப்பட்ட கேஸுகளில் குறைந்தபக்ஷம் இருபது இவனால் உண்டாகியவை யென்று போலீஸ்காரர் கண்டு பிடித்தார்கள்.

இந்த ஜாதியில் குற்றஞ்செய்யும் வகுப்பைச்சேர்ந்தவர்களில் அநேகருக்குக்கூட சொத்திருக்கிறது. அவர்கள் குற்றஞ்செய்து ஜீவிக்கவேண்டியதில்லை. அதிகக் குற்றவாளிகளா யிருப்பவர்கள் மிகவும் ஏழையாயிருக்கும் கள்ளர்களல்லவென்று சமீபத்தில் செய்த விசாரணையால் ஏற்படுகிறது. இது வேடிக்கையாகவே இருக்கிறது. வேறு ஒரு முகாந்தரமுமின்றி, தங்கள் துணிகரமானசெயல்களைக் காட்டவேண்டுமென்ற விருப்பமொன்றையே கொண்டு, நல்ல அந்தஸ்திலுள்ள கள்ளர்களின் குமாரர்கள் அநேகமாய் குற்றம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

இந்த பிரதேசங்களிலுள்ள இதர ஜாதியாருக்கு இந்தக் கள்ளர்களைக் கண்டால் கொஞ்சங்கூடப் பிடிக்கிறதேயில்லையென்பது சகஜமான விஷயம். கையும் களவுமாய் அவர்கள் எவனையாவது கண்டுபிடித்துவிட்டால் அவனை ஈவு இரக்கமில்லாமல் நன்றாய் அடித்து சில சமயங்களில் கொன்றும்போட்டுவிடுகிறார்கள். சுமார் 30 வருஷத்துக்குமுன் மதுரை ஜில்லாவில் உள்ளவர்கள் கள்ளர்களுக்கு விரோதமாய்க்கிளம்பி, பற்பல இடங்களிலுள்ள கள்ளர்களை அவ்விடம் விட்டுத்துரத்தினார்கள். இப்படிச் செய்வதனால் ஜனங்களுக்குள் சண்டையுண்டாகுமென்று அதிகாரிகளுக்குத் தோற்றினபடியால் அதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள்.

கள்ளர்கள் மற்றவர்களிடமிருந்து இரண்டு வகையில் ஒழுங்காய்ப் பணம் ஸம்பாதிக்கிறார்கள் :--

(1) துப்புக்கூலி ஏற்பாடு என்பது ஒன்று; ஒரு ஊரிலுள்ள கால்நடைகளைத் திருடிக்கொண்டுபோய், அவைகளின் விலையில்

பாதிப்பணம் வாங்கிக்கொண்டு இன்னொரு கள்ளன் மூலமாய் அவைகளைச் சொந்தக்காரனுக்குத் திருப்பிக்கொடுப்பது.

(2) காவல் ஏற்பாடு என்பது இரண்டாவது. இதன் பிரகாரம் ஊரார் தங்கள் வீட்டில் திருட்டுப்போகாமலிருப்பதற்காகக் கள்ளர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டியது. தொடர்ச்சியாய் ஊரில் கன்னக்களவும் செய்து ஊராரை இந்த ஏற்பாட்டுக்கு உடன்படும்படி கள்ளர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். இப்படிப் பட்ட காவல் கூலி வாங்கக்கூடாதென்று யாரேனும் சொன்னால் அதன்பலனாக அவர் வீட்டில் அநேகக் கன்னக்களவுகளும் திருட்டுகளும் நடக்கும்.

சில கள்ளர் கூட்டங்களிருக்கின்றன; அவர்கள் தங்களுக்குள் ஒரு சட்டத்தை அனுஸரித்து வருகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒரு தலைவன் உண்டு; அவர்கள் அடிக்கடி இடம் மாறி மாறிக் கொள்ளையடித்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள் காவல் கூலியும் வாங்குவதில்லை; துப்புக்கூலி வாங்கிக்கொண்டு திருட்டுச் சொத்தைச் திருப்பிக்கொடுப்பதுமில்லை.

ஆனால், எந்த ஊரில் கள்ளக்காவல்காரர்களிருக்கிறார்களோ சாதாரணமாய் அந்த ஊரில் மேற்சொன்ன கூட்டங்களின் வேலை ஒன்றும் நடப்பதில்லை. அந்த ஊரின் எல்லைகளுக்குள் ஏதேனும் குற்றம் நடந்தால் திருட்டுப்போன சொத்தைக் காவல்காரர் மூலமாய் அந்தக் கூட்டத்தாரிடமிருந்து சாதாரணமாய் வசூல் செய்துவிடலாம். இப்படி அவர்கள் செய்வதற்குப் பிரதிபலனாக அந்தச் கூட்டங்கள் ஏதாவது ஒரு கள்ளர் கிராமத்தில் சௌக்கியமாய் வாசம் செய்கிறார்கள் அவர்கள் மலைக்குப் போய்விட வேண்டியிருந்தால் ஒவ்வொரு கள்ளனும் அவர்கள் கேட்கும்போதெல்லாம் அவர்களுக்கு ஆகாரம் முதலியன கொண்டுபோய்க் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

சில சமயங்களில ஒரு கிராமத்தில் இரண்டு தனித்தனி வகுப்புக் கள்ளர்கள் காவல் கூலி கேட்பதுண்டு. அந்த ஊர்க்காரர் அப்போது அனுபவிக்கும் கஷ்டம் அளவிட முடியாது. ஒவ்வொரு வகுப்பாரும் ஊரில் நடக்கும் குற்றமெல்லாம் தம் எதிரியான இன்னொரு வகுப்பாரால் நடந்ததென்று சொல்லுவார்கள். இப்படி நடப்பதனால் கிராமத்தார் சாதாரணமாய் இரண்டு வகுப்பாருக்கும் காவல் கூலி கொடுக்கவேண்டிவரும்.

1909-ம் வருஷத்தில் டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சூபரின்டெண்டெண்டாயிருந்தவர் கால்நடைகளுக்கு சூடுபோடும் வழக்கத்தை ஆரம்பித்தார். கால்நடைகளின் சொந்தக்காரர் சில அடையாளங்களைக் கொண்டும், எழுத்துக்களைக் கொண்டும் தங்கள் கால்நடைகளைச் சுலபமாய்க் கண்டுபிடிக்கக் கூடும். இப்படி செய்வதனால், கால்நடைகளை அவைகளின் சொந்தக்காரருக்கன்றி மற்றவர்களுக்கு விற்பது கள்ளர்களுக்கு சாத்தியப்படாதென்றும், திருடர் வசம் இருக்கும் திருட்டுக் கால்நடைகள் எப்படி அவர்களிடம் வந்தது என்றும் ஸமாதானம் சொல்வது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்றும் எல்லோரும் நம்பினார்கள். இந்த ஏற்பாடு பத்து வருஷத்துக்குமேல் அமுலிலிருந்தது; ஆனால் அநேக காரணங்களைக்கொண்டு இதை விட்டுவிட்டார்கள்.

சூடுபோட்டால் கால்நடைகளின் தோல் கெட்டுப்போகிறதென்றும் அப்படி சூடுபோட்ட கால்நடைகளைக் கள்ளர்கள் திருடாமலிருப்பதில்லையென்றும் அவைகளின் சொந்தக்காரர்கள் நினைத்தார்கள். இப்படிச் சூடுபோட்டதன் பலன் என்னவென்றால், கள்ளர் இவைகளைத் திருடிக்கொண்டுபோய் தங்கள் துப்புக் கூலி கிடைக்கும்வரையில் அவைகளை நன்றாய்ப் பத்திரப்படுத்தி வைத்துவிடுகிறார்கள் என்பதே. தவிர, சொந்தக்காரர்களுக்கு சூடுபோட்ட மாடுகளையே திருப்பிக்கொண்டுவந்து கொடுப்பதற்காக அதிகமான துப்புக்கூலியும் கள்ளர்கள் கேட்க ஆரம்பித்தார்கள்.

சொந்தக்காரர்கள தங்கள் கால்நடைக்குச் சூடுபோடாமலிருப்பதற்காக, திருடிப்போன கால்நடைகளைக் கள்ளர்கள் சில சமயங்களில் கொன்றுபோடுவதுண்டு. இதனால் சொந்தக்காரர்களுக்குக் கால்நடைகளின் பூராவிலையும் நஷ்டமாயிற்று. தவிர, கால்நடைகளுக்குச் சூடுபோடுவதும் வெகு கஷ்டமான வேலை. காரமான ரஸங்கள் உபயோகித்தால் அதிக நோவு உண்டாகும். ஆகவே பிரதி வருஷமும் கால்நடைக்குச் சூடுபோட வேண்டியிருந்தது. எப்படியும் சுமார் இரண்டு வருஷமானல் எல்லா அடையாளங்களும் அழிந்து விடுகின்றன.

இப்படிச் சூடுபோடும் வழக்கம் கட்டாயமல்லாததாயிருந்தபடியால், கிராமத்தார் தங்கள் கால்நடைகளில் ஐந்தில் இரு பங்குக்கு மேல் சூடுபோட முன் வருவதில்லை. வழக்கமாய் அவர்கள் போலீஸ்காரரையே சூடுபோடச் சொல்லுவார்கள். அதுவும்,

வயதாய் உபயோகமற்றிருக்கும் மாடுகளுக்குத்தான் சூடுபோடுவது. மரியாதையுள்ள எந்தக் கள்ளனும் அவைகளைத்திருடி தன் கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளமாட்டான்.

கள்ளர்கள் குற்றம் செய்வது ஒரு கௌரவமான பிழைப்பு என்று கருதுகிறார்கள். ஒரு கள்ளன் தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போனால் அதனால் திருடு குறைவதில்லை ; அவனுக்கு அப்பொழுதுதான் பெரிய பேரும் கிடைக்கிறது. கள்ள ஜாதியிலுள்ள அதிக கெட்ட குற்றவாளிகளை மட்டும் பொறுக்கிக் கண்டுபிடித்து அவர்களை ஒரு இடத்தில் குடியேறும்படிச் செய்வோமென்றாலோ அவர்கள் எண்ணிக்கையற்றவர்களாயிருக்கிறார்கள். குற்றங்கள் அதிகமாய்க் கொண்டுவந்தன. பிறமலைக் கள்ளர்கள் குடியிருக்கும் மதுரை ஜில்லாவில்தான் அதிகக் குற்றங்கள் நடந்தன.

காவல் ஏற்பாட்டின்கீழ் அவதூர் பேசுவது பஹிரங்கமாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. கள்ளர்களின் கொடுங்கோன்மை அதிக பலமாய் இருந்தபடியால், அவர்களுடன் போராடும் விஷயத்தில் கிராமத்தார் எவரிடமிருந்தும் உதவி அடையமுடியாதிருந்தபடியால் போலீஸ் இலாகாவில் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் இவைகள் நடப்பதைத் தெரிந்தும் தெரியாததுபோல் இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். கேஸுகளில் சாக்ஷிகளாயிருப்பவர்களைப் பயமுறுத்தி அவர்கள் ஸங்கதி சொன்னால் அவர்களுடைய வீடுகளைக் கள்ளர்கள் கொள்ளையிட்டார்கள். பொருள் காணமற்போய் அதைப்பற்றிப் போலீஸாருக்குத் தெரியப்படுத்தினால் அந்தப்பொருளில் எள்ளளவும் திருப்பிக்கொடுப்பதில்லை.

1915-ம் ௵ முதல் குற்றவாளிக் கூட்டங்களைப் பற்றிய ஆக்டின் நிபந்தனைகளை இந்த ஜாதியாருக்கும் பிரயோகித்து இப்படிப்பட்ட நிலைமையைச் சீர்திருத்த முயற்சிசெய்தோம். ஆனால், வெகு கெட்டபெயருள்ள சில கிராமங்களில் குடியிருந்த ஆண்களை ரெஜிஸ்டர் செய்வதனால் குற்றம் குறையவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காவது, வேடிக்கைக்காவது குற்றஞ் செய்வதையே தொழிலாகக் கொண்ட கள்ளர்கள் இருக்கும் கிராமங்களில் எல்லாம் இந்தச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய போலீஸ்காரர் இல்லை. இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்ததில், குற்றஞ் செய்வதைப்பற்றிக் கள்ளர்களுக்கிருக்கும்

எண்ணத்தை மாற்றவேண்டுமானால் அடியில்கண்டபடி செய்ய வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தோற்றிற்று:—

(1) குற்றஞ்செய்தவனை எப்படி சாதாரண ஜனங்கள் வெறுக்கிறார்களோ அப்படியே அவன் ஜாதியாரும் அவனை முற்றிலும் வெறுக்கும்படி செய்வது;

(2) வயிற்றுப் பிழைப்புக்குத் திருடித்தான் ஆகவேண்டுமென்பதில்லாமல் வேறு ஏதாவது தொழில் செய்து ஜீவிப்பதற்கான மார்க்கம் ஏற்படுத்துவது;

(3) சிறுவயதுள்ள துணிகரமான கள்ளர்களின் புத்தியை இதர மார்க்கங்களில் செலுத்தும்படி செய்வது.

இந்தப் பலனை அடைவதற்குக் கள்ளர் ஜாதியைச் சேர்ந்த ஒருவன் செய்யும் குற்றங்களுக்கு அந்த ஊரிலுள்ளவர்களும் உத்தரவாதிகள் என்பதை அவர்களுக்கு முதன் முதல் தெரிவிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே கள்ளர் கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தும்படி அவர்கள் தூண்டப்பட்டார்கள். இந்தப்பஞ்சாயத்துகள் - அவர்கள் ஊரிலாவது அந்த ஊரிலுள்ளவர்களாலாவது நடக்கும் குற்றங்களைப்பற்றி ரிபோர்ட்செய்யவும், காவல் கூலியையும் துப்புக்கூலியையும் நிறுத்திவிடுவதாகவும், போலீஸாருக்குத் தேவையாயிருக்கும் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுப்பதாகவும், இந்தப் பஞ்சாயத்தார்கள் தங்களைத் தேர்ந்தெடுத்த கள்ளர்களுக்காக ஒப்புக்கொண்டார்கள். பஞ்சாயத்தார் தங்கள் கடமைகளைத் தங்களால் கூடியவரையில் நன்றாய்ச் செய்து வந்த வரையில் அந்த ஊருக்குக் குற்றவாளிகளைப்பற்றிய ஆக்டின் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படவில்லை. இந்த ஏற்பாட்டினால், குற்றவாளிகளைப்பற்றிக் கள்ளர்களுக்கிருக்கும் அபிப்பிராயத்தில் மாறுதல் உண்டானதாகத் தெளிவாய்த் தெரிந்தது. முன் இந்தக் குற்றவாளிகள் வீரர்களாயும் விலை சகாயமான திருட்டுச்சொத்து கொடுப்பவர்களாயும் கருதப்பட்டார்கள். இப்பொழுதோ அவர்கள் தொந்தரவு கொடுப்பவர்களாய் எண்ணப்படுகிறார்கள். சென்ற மூன்று நான்கு வருஷமாய்ப் போலீஸ்காரர் தேடிக்கொண்டிருந்த குற்றவாளிகளில் சுமார் 30 அல்லது 40 பேரை இந்தப் பஞ்சாயத்தார் சென்ற மூன்றுமாத காலத்துக்குள் கண்டுபிடித்து ஒப்புவித்து விட்டார்கள். இதிலிருந்தே அவர்கள் அபிப்பிராயம் எவ்வளவு மாறுதலடைந்திருக்கிறதென்பது தெரியும். பஞ்சாயத்து ஏற்பாடு அமுலிலிருக்கிற பிரதேசங்களில் குற்றங்கள் மிகவும்

குறைந்திருக்கின்றன. திருமங்கலம் சர்க்கிலில் 1920-ம் ஞு ஜனவரிமீ 21 கன்னக்களவு நடந்திருக்க, 1921-ஞு ஜனவரிமாதத்தில் இரண்டே இரண்டுதான் நடந்திருக்கிறது. திருமங்கலம், மதுரைப்பட்டணம், மதுரை தாலூகா இந்த சர்க்கில்களில் மொத்தமாய் 1920-ம் ஞு ஜனவரி மாதத்தில் 39 கன்னக்களவும், 1921-ம் ஞு ஜனவரி மாதத்தில் 7 கன்னக்களவும் நடந்திருக்கின்றன. பஞ்சாயத்து இன்னும் ஏற்படுத்தப்படாத திண்டுக்கல், பழநி, பெரியகுளம், உத்தமபாளையம் இந்த சர்க்கில்களில், 1920-ம் ஞு ஜனவரி மாசத்தில் 42 களவும் 1921-ம் ஞு ஜனவரி மாதத்தில் 48 கன்னக்களவும் நடந்திருக்கின்றன. மற்றவிதமான குற்றங்களைப் பற்றியும் இப்படியே இருக்கிறது.

இந்த ஜில்லாக்கள் முழுவதிலும் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த ஒரு பிரத்தியேகமான போலீஸ் உத்தியோகஸ்தரை இப்போது ஸர்க்காரில் நியமித்திருக்கிறார்கள். ஆயினும், பஞ்சாயத்து ஏற்படுத்துவது மாத்திரமே போதாதென்பதும் தெரியும். கள்ளர்கள் கௌரவமாய்ப் பிழைப்பதிலும் அவர்களுடைய குழந்தைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்து வைப்பதிலும் அவர்களுக்கு உதவியாக ஏதாவது செய்யவேண்டும். ஆகவே இவ்விஷயங்களிலும் கள்ளர்களுக்கு உதவி செய்யும்படி அந்த பிரத்தியேக உத்தியோகஸ்தருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது குற்றம் செய்வதை ஜனங்கள் வெறுப்பதாலும், குற்றம் செய்தல் அபாயகரமாயிருப்பதாலும், மற்ற தொழில்களில் அவர்களுக்குக் கொஞ்சம் அபிருசி உண்டாயிருக்கின்றது. நாடா செய்தல், கயிறு திரித்தல் முதலிய வீட்டுத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண விவசாய கிராமத்தில் வீட்டுக் கைத்தொழில்கள் ஆரம்பிப்பதைவிட இந்த கள்ளர்கள் கிராமத்தில் ஆரம்பிப்பது வெகு சுலபமாயிருக்கிறது. இப்படி இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை. அநேக கள்ளர்கள், ஜெயிலுக்குப் போயிருந்தகாலத்தில் அங்கே சில கைத்தொழில்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுவே பெரிய உதவி. எண்ணெய் எடுத்தல், பாய் நெய்தல், துணி நெசவு ஆகிய இவைகளும் ஆரம்பிக்கப்படுகின்றன். ரஸ்தாவுக்காக வேண்டிய கல்லுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்ட் இந்தக் கள்ளர்களுக்கு கான்ட்ராக்ட் கொடுத்திருக்கிறது. மதுரை மில்லில் 200 கள்ளர்கள் கூலிவேலைசெய்கிறார்கள். முனார்

பீர்மேடு டீ எஸ்டேட்டுகளில் 400 அல்லது 500 பேர் வேலை செய்கிறார்கள்.

இதுதவிர, நிலங்களைக் கைப்பற்றவும் அடமானம் வைக்கவும் கூடாதென்ற நிபந்தனையில் கள்ளர்களுக்கு தரிசு நிலங்கள் தர்க்காஸ்தில் கொடுக்கப்படுகின்றன. இவைகளெல்லாவற்றையும் விட முக்கியமானது, கள்ளர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி செய்வதே. இதனால் பின்வரும் சந்ததிகளின் மனது குற்றங்களைத் தவிர இதர மார்க்கங்களில் பிரவேசிக்கும் என்று நம்புகிறோம். ஒரு கிராமத்திலுள்ள குழந்தைகளை சமீபத்தில் வைக்கப்படும் பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயமாய் அனுப்புவதாக பஞ்சாயத்தார்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் வைப்பதிலும் உபாத்தியாயர்களைப் பயிற்றுவதிலும், தாலுக்கா போர்டும், அமெரிக்கா, ஸ்வீடன் ரோமன் கதோலிக் பாதிரிகளும் ஸர்க்காருக்கு உதவியாக அவர்களுடன் ஒத்துழைக்கிறார்கள்.

இந்தக் காரியங்களெல்லாம் கஷ்டமில்லாமல் நடக்கவில்லை. ஆரம்பத்தில் கள்ளர்களுக்குத் தங்கள் மாமூலான தொழிலை விட்டு விட இஷ்டமேயில்லை. தங்கள் விரோதிகளான போலீஸ்காரரைக் கண்டவுடன் அவர்களுக்கு ஸந்தேஹமுண்டாயிற்று. ரிஸர்வ் போலீஸ்காரர் வீடுவீடாய்ப் போய் இருநூறு ஜாமீன்கள் வாங்கினதன் பிறகுதான், போலீஸ்காரர் சொல்வதற்குக் கள்ளர்கள் செவி கொடுத்தார்கள். அப்பொழுதுதான் போலீஸ்காரர் உண்மையில் அவர்களுக்கு நல்லதைச சொல்லுகிறார்களென்று தெரிய வந்தது. கள்ளர்களில் அநேகர் இதை இப்பொழுது அறிந்துகொண்டு வேறு மார்க்கங்களில் புத்தியைச் செலுத்தித் தங்களைச் சீர்திருத்திக்கொள்ள நிதானமாய் ஆரம்பித்து விட்டார்கள்.

உலகத்தில் எங்கேயாகிலும் குற்றம் அதிகப்பட்டால் அது மாத்திரம் ஜனங்களுக்கு உடனே நன்றாய்த் தெரிகிறதேயொழிய, குற்றங்கள் குறைந்தால் அது அவர்களுக்குப் புலப்படுவதில்லை. சில கிராமங்களில் துப்புக் கூலியும் காவல் ஏற்பாடும் நின்றுபோனதைப்பற்றி ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள். கள்ளர்களைச் சீர்திருத்தும் விஷயத்தில் போலீஸ்காரரும் கள்ளர்களும் எவ்வளவு அக்கறையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவ்வளவு அக்கறையுள்ளவர்களாய் பொதுஜனங்களுமிருப்பார்களென்று நம்புகிறோம். இப்படிச் சீர்திருத்துவது ஒருவேளை அசாத்தியமாகிவிடுமோ

வென்று சந்தேகப்பட காரணமேயில்லை. தென்னிந்தியாவிலுள்ள மனிதர்களுள் கள்ளர்களுக்கு நல்ல புத்தி சாதுர்யமும் தேகபலமும் இருக்கிறது. தங்களுடைய சாமர்த்தியத்தைக் கெட்ட வழிகளில் செலுத்தித் தங்கள் ஜாதியாருக்குக் கொண்டுவந்திருக்கும் அவமானத்தை நல்ல புத்தியுள்ள கள்ளர்கள் அறிந்துகொண்டு, அதை நிவர்த்தித்துத் தங்கள் ஜாதியாருக்கு மறுபடியும் நல்ல பெயர் கொண்டுவர அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பொறுமை, அநுதாபம், விடாமுயற்சி இவைகளிருந்தால் சீக்கிரத்தில் இது நிறைவேறுமென்று நம்புகிறோம்.

---

## சமரசஞானதீபம்

(சூளை - சோமசுந்தரநாயகரவர்களியற்றியது.)

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

சத்தமாத்திரமாயுள்ளபொருளே சிவமும், அதன் தாதான்மியகுணமாகிய சித்தே சத்தியுமாக வேதசிவாகமங்கள் கூறலின், அவ்விருவரு முலகுக்குப் பிதாமாதாக்களாயினர். அவ்விருபொருளொற்றுமையினுண்டாமாநந்த ஸ்புரணமே சிவசத்திகள் பெற்ற மக்களாவர். இம்மூன்றுபொருளு மொரேபொருளன்றி வேறில்லை. ஸச்சிதாநந்த கநீபூதமாகிய அப்பரம்பொருள் விகாசத்தைப் பகுத்துணருங்கால் ஸத்தின் கனமேசிவனும், சித்தின் கனமேயுமையும், ஆநந்தத்தின் கனமே ஸ்கந்தகணேசர்களுமாம். பொன்னே பூஷணமாகத் திரிந்த வுவமானவாயிலாக மேலுண்மையைக் கவர்ந்திடுக. முன்னும்பின்னு நிலைகெடாது நின்ற பொன்னைப்போல் விளங்கு நம்பதிநிலையினைத்தென வெளிப்பட்டமையாலவர்க்கொரு நாமமுமில்லை யென்றதும் ஆயிரநாமங்களுள வென்பதுமாகிய பரமாசாரியர் கருத்தும் வெளிப்பட்டது. அன்றியும், மாயீகமாகிய பிரபஞ்ச தர்மத்தைக் கடந்தொளிர்வது என்னு முண்மையும் போதரும். எங்ஙனமெனின், கணவன், மனைவி, மக்களென்னு முலக தர்மத்தை நோக்குழிக் கணவனோரான்மாவும், மனைவியோரான்மாவும், மக்கள் வேறுவேறு ஆன்மாக்களுமாக வினைக்கீடாக வொருவரை யொருவர் சம்பந்தங்கொள்ளத் தநுவாதிகளை மாயையிற் கொண்டு போந்துழலா நிற்பர். இங்ஙனம் போல்வதன்றென்னு முண்மையையே அப்பரமவாக்குகள் காட்டின. சிவனொருகடவுளும், உமையொருகடவுளும், ஸ்கந்த கணே

சர்கள் வேறுவேறு கடவுளர்களுமாகக் கொள்ளாமைக்கே அவை பலஞ் செய்யுமென்க. பிரமனாதி கடவுளரைத் தனித்தனிப் பசுக்களாக வேதஞ் சொல்லுகையா லன்னோர் மனைவிமக்களு மவரவர் வினைக்கீடாகச் சிவனாற் கூட்டுவிக்கப் பெற்ற வேறுவேறு பசுக்களேயாவர். இவ்வுண்மைகளால், "பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு ளும்பர்களெவர்க்கு முயர்ந்தோ னென்பது தெளிகவியல் புணர்ந்தோரே" என்ற பிரமாணப்படி ஸமஸ்த சேதனாசேதனோஜ்ஜீவிதமாயுள்ள அப்பிராகிருதமாகிய திருமேனிகளையுடையானென்பதே தீர்மானம். இவற்றின் விரிவை யாஞ்செய்துள்ள "சிவபாரம்யப்பிரதரிசினி" என்னும் பிரபந்தத்தில் "சிவன் எத்தன்மையர்" என்னும் பகுதியிற்பரக்கக் காணலாமென்க. இன்னபரமகல்யாணகுணை கவிக்கிரகமாய் விளங்கு நங்கடவுள் திரிமூர்த்தியுத்தீர்ணராயுள்ளவராகையால் அவராணையின் வழியொழுகும் மாயாகுணவிசிட்டாளாகிய திரிமூர்த்திகளில் ஸத்வப் பிரதானராகிய உருத்திரரே நஞ்சைவ சமயத்தாற்பெறப்படும் பரமபதியென்று துணியற்க. "செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்னும் பிரமாணத்தானுந் தெளிந்திடுக. "ஓதருணை வித்தகரை மூவரிலொருத்தரெனவோதியிடு மற்பமதியீர்" என்றதனாலுங்காண்க. இன்னு மப்பாடலில் அப்பதிப்பொருள் ஸ்ரீ சிதம்பரமென்னு மோர் க்ஷேத்திரத்தை யிடங்கொண்டிருப்பதொன்று மென்பதுஞ் "சோமசேகர கிருபானுவாய்" என ஆசிரியர் கூறிய வுண்மையை நிறுத்தும். ஸ்ரீ சிதம்பரமென்கையில், அது சமயமொன்றையுஞ் சாராது பொதுவாய் விளங்கலா னண்டு மூர்த்தி விடய முக்கியமன்றெனின், "தானே யகண்டாகார மயந் தன்னி லெழுந்து பொதுநடஞ் செய் வானே" எனக் கூறியுள்ள வாக்கியத்தால் அது தள்ளுண்டதென்க. மேலிடத்தில் சச்சிதாநந்த கனீபூதமான சிவலட்சணத்தை வர்ணித்திருப்பதையே மீண்டும் பயன்படுத்திக்கொள்க. அந்த க்ஷேத்திரத்தி லெல்லாச் சமயிகளு மபிமானம் வைத்தலா லன்னோர் கூறும் மூர்த்திகளே பிரதானமெனி னாகாதோவெனின், அவர் தன்மையை விசாரிக்கி லவருட்சிலர் கேவலம் ரூபவாதிகளும், சிலர் கேவலம் அரூபவாதிகளுமாய்க் காண்டலாலவர் சொந்தம் பாராட்டுதற்கு அச்சிதாகாயமிடந்தராதென்க. அவரெல்லாமுஞ் சைவரைப்போன் மூர்த்தா மூர்த்தங்களை யங்கீகரிப்பினன்றோ வவர்க்கு மங்கே யிடஞ்செய்யலாம்? அவர்களுக்கங்கே யிடமில்லாதபோது அவரபிமானஞ் சேர்தலுக்கு

வழியேயெதெனின், மேலிடத்தில் தேகத்தையும், அத்தேகத்தி லவய வங்களையுஞ் சமட்டி வியட்டிகளாக வபிமானிக்கு முவமானத்தாற் சமயங்களின் றன்மையைக் கூறினோமாகையால் அதை யிங்கே வினியோகஞ் செய்துகொள்க. மூர்த்தா மூர்த்தங்களை யெல்லாஞ் சமட்டியிற் கொண்டவருக்கு எல்லா அவயவங்களுங் கூடிய தேகத் தைக் கொண்டவரும், மூர்த்தம், அல்லது அமூர்த்தங்களைத் தனித் தனி வியட்டியாகக் கொண்டவருக்குக் கரசரணாதி அவயவங்களைத் தனித்தனி வியட்டியாகக் கொண்டவரு முவமிக்கப்படுதலால் வியட் டியாளர் சமட்டியில் அபிமானம் பூண்பதற்குண்டான ஹேது வெளிப்பட்டதென்க. "தில்லைமன்றுட் பார்த்தபோதங் கென் மார்க்க மிருக்குதெல்லாம் வெளியேயென்ன வெச்சமயத் தவர்க ளும் வந்திறைஞ்சா நிற்பர்" என்றபடியாலுங் கண்டுணர்க. வேத சிவாகமங்களுக்குப் பாஹ்ய மதவாதிகளுள் அரூபவாதிகளே யதிக மாகையா லவரும் வியட்டித் தன்மையா லடங்கி விட்டனர். தேகத்திலடங்கிய வுறுப்புக்களைத் தனித்தனி யபிமானித்தவர் தேகத்துக்குப் பாஹ்யவாதிக ளல்லாததுபோல் மூர்த்தா மூர்த் தங்களைக் கொண்ட சமட்டி சிவதர்மத்தைத் தனித்தனி வியட்டி யாகக் கிரகித்துக்கொண்டவ ரெப்படி வேத சிவாகம பாஹ்யராகக் கூடுமெனின், அவர் பதியினது மூர்த்தாமூர்த்தங்களைக் கொள்ளா மல் பசு பாசங்களிற்போந்த மூர்த்தாமூர்த்தங்களைக் கொள்ளலால் பாஹ்யவாதிகளென்பதிற் றட்டில்லை. புருடனொருவனை யடைந்து தான் கோரிய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வெண்ணிய வொருவன் தானு புருடனையடைந்து தடுமாறியதே யிதற்கு நிதரி சனமாம். அப்படியான காலத்துங் கட்டை மாத்திரமே விரோ தப்பட்டு அதிற் புருடாகிருதி விரோதியாவண்ணம் அவர் பசுபாச மூர்த்தங்களைக் கொள்ளும்போது மவையே பதி மூர்த்தங்களென மயங்கினதேயன்றி வேறில்லையாகையால் எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பரென் றதனுண்மை விளங்கும். சைவத்தில் வேறான புறச்சமயங்களிலும் அரூபவாத மங்கீகாரமேனு மவை கூறு மரூபவியலும், பதியியலுங் கேவலம் முரணுதலால் அவை சைவர்க்கு ஸாமஞ்சஸ மாகாவென வறிக. இக்கருத்தையே "பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம்" என மேல் வலிந் தறிவுறுத்தியபடியாம். இது சைவரையே நோக்கிக் கூறிய

தென்க. புறச்சமயிகள் கூறுந் துர்ப்போதங்களான் மயங்கி முன்னுள்ள சிவத்வாபி வியக்தியை யிழந்தலையு மூர்க்கப் பிணங்களை நோக்கிக் கூறினமை கொண்டே 'இக்கருத்தை விட்டு' எனவும், 'புகுதவேண்டாம்' எனவும் விதந்தமை தெரியும். இக்கருத்தையே 'உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்' எனப் பரமாசாரிய மூர்த்திகளுங் கூறினர். மேலிவை யுண்மை முத்தியைப் பயவா வென்பது விளங்கும் பொருட்டே 'முத்திதருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே' என்று கூறியபடியுங் காண்க. புறப்புறச்சயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சயமென்னு மிருபத்து நான்கு வகைப்பட்ட பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய பல சமயங்களாலும் முத்தி கைகூடாவென்பதன் விரிவைச் சிவஞானசித்தியார், தத்துவப்பிரகாசம் முதலிய நூல்களாற் கண்டுணர்க. ஈண்டுத் தெய்வசபையைக் காண்டன் மாத்திரந்தானே முத்தியுண்டா மென்பது போதரும். தெய்வசபை யென்றது தில்லைமன்றே யாகையால் தில்லையைக் கண்டால் முத்தியென்ற வேதப் பிரமாணமே சாலும். தேவன் என்பதற்குப் பிரகாசமானவன் என்று மேலோர் பொருள் விரித்தலால் அந்தச் சத்திகொண்டே மாயாகாரியங்களாகிய சித்திரங்களைச் செய்யுமத்தேவனிடத்திற் கூலிக்கு வேலை செய்யும் பல வேலைக்காரருக்குந் தேவரெனப் பெயர் வந்தமை காண்க. அந்த வேலையினின்று மவர்கள் தள்ளப்பட்டால் மானிடர், நாய்கள், பேய்களாகப் பாவிக்க வருதலி னுண்மை விசாரத்தாற் போதருந் தெய்வமொன்றென்பதே தீர்மானம். தேவியென்னும் ரூடிப்பெயரை யுடைய வுமைக்கு நாதரேயன்றோ தேவராதல் சாலும். அந்தத் தெய்வமே தில்லை மன்று ளிருப்பதாலன்றோ அது தேவ சபையாயிற்று? அதுவே உண்மைத் தெய்வமென்பதற்கும், தில்லையைக் கண்டால் முத்தி யென்பற்கும் போந்த விதிகாசமொன்று கூறுவாம்.

(இன்னும் வரும்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ மகாஜனக் கூட்டம்

## சுத்தாத்வைத சித்தாந்த சைவமட ஸ்தாபனம்

திருவொற்றியூர், திருமயிலை என்னும் இருபெருந் திருத்தலங்களை இருகண்களாகப் பெற்று, நம் தமிழகத்தின் தலைநகரமா யிருக்கும் சென்னையம்பதியானது, சிலகாலமாக, உண்மை ஞானோபதேசஞ் செய்து உலகத்தவரை வழிப்படுத்தும் பெரியோர்களின் வாசத்தை யிழந்து பல தீமைகள் விளையும் இடமாய் விட்டது. ஆதலால், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர், தங்கள் சகோதரத் திருக்கூட்டங்களின் துணையைக் கொண்டும், ஏனைய சைவத்திருவாளர்களின் உதவியைக் கொண்டும், இம்மாநகரில் ஒரு சைவத் திருமடம் தாபித்து, அதில் துறவறமேற்கொண்டு கல்வி யறிவு ஒழுக்கங்களாற் சிறந்து மெய்ஞ்ஞான நிட்டை மேவியிருக்கும் பெரியாரை எழுந்தருளுவித்து, இங்குள்ளார்க்கு ஞானோபதேசம், தீக்கை, பிரசங்கம் முதலியன செய்வித்து, இயன்ற வழிகளிலெல்லாம் சைவசமய பரிபாலனம் செய்விப்பது கருதி, நிகழும் துன்மதி௵ புரட்டாசி௴ 31௳ (1921௵ அக்டோபர்௴ 16௳) ஆதிவாரம் பகல் 3-மணிக்கு, சென்னை பச்சையப்ப முதலியார் கலாசாலை மகா மண்டபத்தில் ஒரு மகாஜனக்கூட்டம் கூட்டுவார்கள். அப்போது திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனத் தபோதனர் குழாத்தினரும், சிதம்பரம் செந்தமிழ் வேதப்பிரகாச சபைத்தலைவரும், சுத்தாத்வைத சித்தாந்த சைவப் பிரவர்த்தகாசாரியருமாகிய **ஸ்ரீலஸ்ரீ தரு - ஞா. சண்முகத் தம்பிரான் சுவாமிகள்** அக்கிராசனத்தில் அமர்ந்தருள, சைவதவ விசிட்டர்களும், சைவப்பிரசாரகர்களும், சகோதரத் திருக்கூட்டத்தினர்களும் விஜயஞ்செய்து உபந்நியாசங்களும் தமிழ் வேதபாராயணமும் செய்வார்கள். சைவத் திருவாளர்காள் வம்மின்; வம்மின். வந்து தரிசன சிரவணாதிகளால் இன்புற்று வாழ்மின்; வாழ்மின். சைவம் எங்கும் தழைக்குமாறு செய்மின்; செய்மின்.

ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமாக இடம் அமைக்கப்படும்.

அப்போது நடை பெறுவன

(1) மத போதனையைப்பற்றிய உபந்நியாசம்.
(2) சென்னையில் சைவமட ஸ்தாபனம்.
(3) டாக்டர் கோர் மசோதா ஆராய்ச்சி.
(4) இந்து தேவஸ்தான கமிட்டியைச் சீர்திருத்தல்.

இங்ஙனம்:

சென்னைச்
சிவனடியார் திருக்கூட்டம்,
சென்னை, 8-10-1921.

இ. ஆதிமூல முதலியார்,
காரியதரிசி.

## நிர்வாக சபையார்

### போஷகர்

ஸ்ரீமான் ராவ்பஹதூர்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்.

### சபைத்தலைவர்

,, ச. ராஜாகண்ணு முதலியாரவர்கள், B. A.
Retired Supt., Acct., Genl's Office.

### உதவி சபைத்தலைவர்

,, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், B. A.,
(Government Pensioner.)

### காரியதரிசி

,, இ. ஆதிமூல முதலியாரவர்கள்,
(Government Pensioner.)

### உதவி காரியதரிசி

,, இ. கண்ணப்ப முதலியாரவர்கள், வர்த்தகர்.
Correspondent - பாடசாலை விசாரணைக் கர்த்தர்.

,, ரே. சண்முக முதலியாரவர்கள், (Clerk, Parry & Co.)

### கணித பரிசோதகர்

,, கூ. சிவ வாசுதேவ முதலியாரவர்கள்,
(Retired Accountant, M. & S. M. Ry.)

### அத்தியட்சர்கள்

,, திரு. சபாபதி முதலியாரவர்கள், (Retired Sub-Engineer.)

,, ரா. பி. துரைசாமி முதலியாரவர்கள்,
(Government Pensioner.)

,, தி. தியாகராஜ முதலியாரவர்கள்,
(Clerk, Accountant General's Office.)

,, வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,
(Head Clerk, Government Press.)

,, கா. முருகேசச் செட்டியாரவர்கள்,
(Proprietor, Gounian Press.)

,, யன். வி. அப்பாதுரை முதலியாரவர்கள்,
(Clerk, Post Office.)

,, க. கணபதி முதலியாரவர்கள்,
(Head Clerk, Audit Office, M. & S. M. Ry.)

சிவமயம்.

சென்னை பச்சையப்ப முதலியார் கலாசாலை மகாமண்டபத்தில், நிகழும் **1921**௵ அக்டோபர்மீ **16**உ ஆதிவாரம் கூடும் சைவமகா ஜனக்கூட்டத்தில், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் செய்ய விருக்கும் பிரேரணங்கள்:—

(1) சென்னையில் நிகழும் துன்மதி௵ தைமீ சுத்தாத்வைத சித்தாந்த சைவத் திருமடம் எனப் பெயரிய திருமடம் ஒன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) இத்திருமடம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஆதரவினால் திருக்கூட்டத்தின் அபிப்பிராயத்தின்படி நடைபெறுவதாயிருத்தல் வேண்டும்.

(3) சைவசமயிகள் ஒவ்வொருவரும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு சைவசபையும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் கிளைச் சபையாக இருந்து இயன்ற உதவிபுரிதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு சிவாலய தருமகர்த்தரும் தங்கள் தங்கள் ஆலய வருமானத்திலிருந்து இயன்ற உதவிசெய்து சைவசமய பரிபாலனம் செய்வித்தல் வேண்டும்.

(6) துறவு பூண்டு கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த தம்பிரான்மார்கள் மூவருக்குக் குறையாமல் மடாதிபதியாகவும் உதவி மடாதிபதிகளாகவும் இருந்து, சனங்களால் சைவசமயத் தலைவர்களாக வழிபடப் பெற்று, தீக்கை, சாஸ்திரோபதேசம், பிரசங்கம், ஆலயபரிபாலனம், பாடசாலைகள் மூலமாகச் சிறுவர்களுக்கு இலௌகிகக் கல்வியோடு சமயக்கல்வியும் ஒழுக்கமுங் கற்பித்தல், ஆதரவற்ற சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் அறச்சாலை வைத்து அன்னவஸ்திர[illegible]மாதியவை கொடுத்து, கல்வியும் கைத்தொழிலும் கற்பித்து பத்திமார்க்கத்தில் [illegible]லுத்துதல், துறவிகளை யுபசரித்தல், சைவப்பத்திரிகை வெளியிடல், புத்தகசாலை வைத்துத் தமிழ் நூல்களையும் சைவநூல்களையும் காப்பாற்றுதல், அச்சிடப்படாத தமிழ்நூல்களை யச்சிடல், தமிழ்ப் புலவர்களையும் சைவப்பிரசாரகர்களையும் ஆதரித்தல் முதலியவற்றால் சைவ சமய பரிபாலனம் செய்வித்தல் வேண்டும்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ப்ரணவ வித்யா பரிமளம் என்னும்

# ஓங்கார விளக்கம்.

---

(நானூறு வேதப் பிரமாணங்கள் கிரந்தலிபியில் தமிழுச்சரிப்புடன் பொழிப்புரையுஞ் சேர்ந்துள்ளன.)

இவ்வரிய நூலில் சர்வசப்தமய அர்த்தமயப் பிரபஞ்சங்களுக்கு மூலகாரணமாயுள்ள ஒப்பற்ற ஒருமொழி ஓங்காரமெனவும், அதுவே சர்வமந்திர சாரபூத அருணாதமெனவும், அதில் இயைந்துள்ள மந்திரார்த்தம், யந்திரார்த்தம், பிரபஞ்சார்த்தம், தேவதார்த்தம், ஞானார்த்தம் ஆகிய இவைகள் முமூட்சுக்களால் அறியற்பாலன வெனவும் நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. அன்றியும், ஓங்காரத்தின் நான்காவதான அர்த்தயாத்திரையின் தேவதையாகிய புருஷசப்த வாச்சியர் மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட துரீயசிவனெனவும், அவரே புருஷஸூக்தத்திற்கும், காயத்திரி மகாமந்திரத்திற்கும் உட்பொருளா யுள்ளவரெனவும், தாரகமந்திரம் எஞ்ஞான்றும் பிரணவத்தையே ரூடியாகக் குறிப்பதன்றி இராமநாமத்தைக் குறிக்காதெனவும், ஆத்ம மந்திரமாகிய ஹம்ஸ மந்திரமே ஸோஹம் என்னும் மஹா மந்திரமாய்த் திகழுமெனவும், அதில் தேவமூலமாகிய பிரணவம் இடர்ப்பட்டிருக்கின்றதெனவும் ஸ்பஷ்டமாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன இன்னும் அநேக பிரணவ இரகசியங்கள் வெளிவந்துள்ளன. இறுதியில் புருஷஸூக்தமும் சேர்க்கப்பட்டுள்ளது. இது எவர்க்கும் பயன்படுமாறு அடியேனால் நானூற்றுக்கு மேற்பட்ட வேதப் பிரமாணங் ளாடு இலகுவான நடையில் திருவருளை முன்னிட்டு வரையப் ட்டுள்ளது. டெம்மி 8-பக்கங்கொண்ட 30-பாரங்களாய்த் த் ழ்கின்றது.

இத வ விலை ரூபா 2—4—0 தபாற் கூலி வேறு. வேண்டுவோர் அ யேனுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விபூ ா ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம் விலை அணா 0—2—0.

இங்ஙனம்:

ன் சோ. சிவ அருணகிரி முதலியார்,

38, முருகப்பமுதலி தெரு, புரசைவாக்கம்,

56

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆம் முதல் 1919ஆம் வரையில் வெளிவந்தவை.) | | | | |
| காலிகோ கட்டடம் செய்தது | விலை | 5 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானனந்த சம்பாஷணை | | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 0 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவலிங்மாலிய மான்மியம் | | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 0 |

## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினல் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.

## டாக்டர் உ. வே. சாமிநாதையர் நினைவு ஹைஸ்கூல் மாணவிகள் திருக்கழுக்குன்ற யாத்திரைப் பரிசு நிதி, சென்னை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது

---

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் மேலே குறிப்பிட்ட நிதிக்குரிய மூலதனம் ரூ. 3000 சர்க்கார் ஒப்புக்கொண்டவண்ணம், சாரிடபிள் எண்டௌமெண்டு டிரஷரர் மூலம் 3% கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது.

இந்த நிதி சம்பந்தமான விவரங்கள் 20-6-56 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் பக்கம் 352-ல் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பெற்றுள்ளது.

பரிசுத் திட்டம் சம்பந்தமான விதிகள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

1. இந்த நிதி 'சென்னையில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நினைவு ஹைஸ்கூல் மாணவிகள் திருக்கழுக்குன்ற யாத்திரைப் பரிசு நிதி' என அழைக்கப்பெறும்.

2. சென்னைப் பெண்பள்ளிகள் இன்ஸ்பெக்டரஸ் அவர்கள் (Inspectress of girls' school, Madras) இந்த நிதியைப் பரிபாலித்து வருவார்கள்.

3. இந்த நிதியின் மூலதனமாகிய ரூ. 3000, 3% வட்டி வரக்கூடிய 1946-ம் வருடத்திய சர்க்கார் கடன் பத்திரங்களில் (3% Conversion Loan of 1947) முதலீடு செய்யப் பெற்றுள்ளது.

4. காசியில் ஸ்ரீ குமாரசாமி மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் பாடப்பெற்ற 'சகல கலா

வல்லி மாலை' 10 பாடல்களிலும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருக்கழுக்குன்றப் பதிகம் ஏழு பாசுரங்களிலும் (எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூல மாகவும்) ஒரு போட்டித் தேர்வு நடத்தப்பெறும். இந்த இரண்டு (எழுத்து, வாய்மொழி) தேர்வுகளும் அடையாறு டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்திலோ அல்லது இது விஷயத்தில் பெண்கள் பள்ளி இன்ஸ் பெக்டரஸ் அவர்கள் குறிப்பிடும் சௌகரியமான வேறு இடத்திலோ ஆண்டுதோறும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் நடத்தப்பெறும்.

5. கீழ்க்கண்ட ஒரு குழுவினரால் பரீட்சை நடத்தப் பெறும்:

(1) சென்னை, அடையாறு டாக்டர் உ. வே. சாமி நாதையர் நூல் நிலைய அத்யக்ஷர்.
(2) சென்னை, அடையாறு டாக்டர் உ. வே. சாமி நதையர் நூல் நிலைய க்யூரேட்டர்.
(3) டாக்டர் உ. வே. சாமிநாதையரின் பேரர் ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயரும் பின்னர் அவருடைய வார்சுகளும்.
(4) போட்டியில் கலந்து கொள்ளும் மாணவிகள் பயிலும் பள்ளிக்கூடங்களின் தலைவர்கள்.

6. பெண்கள் பள்ளியில் இன்ஸ்பெக்டரஸ் அவர்கள் பரீட்சைக் குழுவின் தலைவராக இருப்பார். குழுவிற்கு வேறு யாரையேனும் தலைவராக நியமிக்க அவருக்கு அதி காரம் உண்டு. எழுத்து, வாய்மொழி ஆகிய இரண்டு பரீட்சைகளையும் குழுவினர் நடத்துவர். குழுவினர் கூறும் அபிப்பிராயங்களை ஏற்றுத் தொகைகளை வாங்கி விநியோகிக்க வேண்டிய ஏற்பாடுகளைப் பரிபாலகர் செய்வர். நிதியைப் பரிபாலிக்கும் சம்பந்தமான சகல விஷயங்களிலும், பரிசுகள் அளிக்கும் விஷயத்திலும் பரி பாலகரின் தீர்ப்பே முடிவானது.

7. சென்னை நகர எல்லைக்குட்பட்ட எல்லாப் பள்ளி களிலும் எஸ். எஸ். எல். சி. வகுப்பில் பாகங்கள் 1, 2 ஆகிய இரண்டிலும் தமிழை எடுத்துக்கொண்டு பயிலும் மாணவிகள் இத்தேர்வுகளை எழுத வரலாம். ஆண்டு தோறும் நவம்பர் முதல் தேதிக்குள் தங்கள் ஹைஸ்கூல் தலைமையாசிரியைகள் மூலம், சென்னைப் பெண்கள் பள்ளி களின் இன்ஸ்பெக்டரஸ் அவர்கட்குப் பரீட்சைக்குச் செல்ல மனுச்செய்து கொள்ளவேண்டும்.

8. பரீட்சையில் வெற்றி பெறும் முதல் ஐந்து மாணவி கட்கும் ரூ. 10 வீதம் மொத்தம் 5 பரிசுகள் அளிக்கப் பெறும்.

9. டாக்டர் உ. வே. சாமிநாதையர் உயிர் நீத்ததும், புனித க்ஷேத்திரமுமாகிய திருக்கழுக்குன்றத்திற்கு சென்று, நெஞ்சுருக்கும் திருவாசகத்தில் மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற ஸ்ரீ வேதகிரீசரைத் தரிசிக்கவும், குன்றில் புனிதக் கழுகுகள் அமுது செய்யும் காட்சியைக் காணவும் பரிசு பெறுவோருக்கு வாய்ப்பு அளிக்கப்பெறும். இதற்காகச் சென்னையிலிருந்து போய் வருவதற்குரிய ரயில் மூன்றாவது வகுப்புக் கட்டணமும் பஸ் கட்டணமும் ஒரு நாளுக்கு மட்டுமுரிய படிச்செலவு ரூ. 1-8-0-ம் ஒவ்வொரு மாணவிக்கும் அளிக்கப்பெறும்.

10. இந்த மாணவிகளுடன் செல்லுதற்பொருட்டு முதற் பரிசும், இரண்டாவது பரிசும் பெறும் மாணவிகள் பயிலும் பள்ளிகளின் தலைவர்கள் இரண்டு ஆசிரியைகளைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம். இந்த ஆசிரியை ஒவ் வொருவர்க்கும் ரயில், பஸ் இரண்டாவது வகுப்புக் கட்டணமும், ஒரு நாளுக்கு மட்டுமுரிய படிச்செலவு ரூ. 3-ம் கொடுக்கப்பெறும்.

11. ஜனவரி 31-ம் தேதிக்குள் யாத்திரை பூர்த்தி செய்தல் வேண்டும். பரிசுத் தொகைகளும் பிரயாணப் படிச் செலவுத் தொகைகளும் அடையாற்றில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நினைவுநாள் விழாவன்று வழங்கப்பெறும்.

12. ஓராண்டில் பரிசு பெறுபவர் மீண்டும் அடுத்துவரும் ஆண்டுகளில் பரிசுபெறப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பெற மாட்டார்கள்.

13. எந்த ஆண்டிலாவது பரிசுகள் சிலவோ அனைத்துமோ அளிக்கப் பெறாவிடில் மிச்சமாகும் தொகை, மாயூரம் முனிசிபல் கௌன்சிலரால் 1953-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ந் தேதி செய்யப்பெற்ற தீர்மானம் 1083-ன்படி ஒத்துக் கொள்ளப் பெற்ற, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லிமாலைப் பரிசு நிதியின் பரிபாலனத் திட்டத்தையொட்டி மாணவிகளுக்குப் பரிசு அளிக்க மாயூரம் கவர்ன்மெண்டு பெண்பள்ளித் தலைமை யாசிரியையிடம் சேர்ப்பிக்கப் பெறவேண்டும்.

14. பரிசுத் தொகையும், பிரயாணப்படிச் செலவுத் தொகையும் அளிக்கப் பெற்றபின் மீதமாகும் வட்டித் தொகை நிதியின் பரிபாலகர் கருத்துக்கிணங்கப் பரிசளிப்புச் சம்பந்தமாக ஏற்படும் சில்லறைச் செலவினங் கட்கு ஒதுக்கப் பெறலாம்.

15. 3% கடன் பத்திரம் சர்க்காரால் நிறுத்தப் பெற்ருல், வேறு நல்ல வகையில் வட்டி வரக்கூடிய சர்க்கார் செக்யூரிடிகளில் நிதியின் மூலதனத்தை நிதியின் பரிபாலகர் முதலீடு செய்யலாம்.

16. இந்த நிதியை அமைத்தவர்களுக்கும் அவர்க்குப்பின் உரிமையுள்ளவர்களுக்கும் ஆண்டுதோறும் வரவு செலவு விவரம் பற்றிய குறிப்பும், பரிசளிக்கப்பெற்ற மாணவி களின் விவரமும், அல்லது மாயூரம் சர்க்கார் பெண்பள்ளித் தலைவருக்குத் தொகை அனுப்பப்பெற்றிருந்தால் அந்த விவரமும் நிதியின் பரிபாலகர் தெரிவித்தல் வேண்டும்.

17. நிதித் தொகை இதில் குறிப்பிடப்பெற்ற தருமங்களுக்கன்றி வேறு எந்த வகைக்கும் மாற்றி யமைக்கக்கூடாது.

---

உ

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

*திருக்கழுக்குன்றப் பதிகம்

குருதரிசனம்

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1. பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் ஞமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி ஞய்கழுக் குன்றிலே.

---

*திருக்கழுக்குன்றம் மலைக்கோயிலில் இப்பதிகம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் சிலாசாஸனமாகப் பொறிக்கப் பெற்றுள்ளது.

2. பிட்டு நேர்பட மண்சு மந்த
 பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
 சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
 நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
 காட்டி னாய்கழுக் குன்றிலே.

3. மலங்கி னேன்கண்ணி னீரை மாற்றி
 மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
 மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிகளி
 ரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
 காட்டி னாய்கழுக் குன்றிலே.

4. பூணொ ணாததொ ரன்பு பூண்டு
 பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாண மெய்தி
 நடுக்க டலுள ழுந்திநான்
பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
 தோணி பற்றி யுகைத்தலும்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
 காட்டி னாய்கழுக் குன்றிலே.

5. கோல மேனிவ ராக மேகுண
 மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேது மறிந்தி லாதவென்
 சிந்தை வைத்தசி காமணி
ஞால மேகரி யாக நானுனை
 நச்சி நச்சிட வந்திடுங்
கால மேயுனை யோத நீவந்து
 காட்டி னாய்கழுக் குன்றிலே.

6. பேத மில்லதொர் கற்ப ளித்த
 பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீயெனை
 ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
 தனிச்ச ரண்சர ணாமெனக்

காத லாலுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

7. இயக்கி மாரறு பத்து நால்வரை
எண்கு ணஞ்செய்த ஈசனே
மயக்க மாயதொர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள ழுந்தவும்
துயக்க றுத்தெனை யாண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்

---

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

## சகலகலாவல்லி மாலை

---

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ?சக மேழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்;பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே!
சகல கலாவல்லியே!

3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோ?உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னே?நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்!
சகல கலாவல்லியே?

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காய்;எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்;உளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும்வண்ணம்

காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

8. சொல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்;நளி ஞசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

9. சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்?நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே!

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகலகலா வல்லியே!

---